2013 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

139—

குளிர்பதனக் கிடங்கு

***20508—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் தக்காளிக்கென் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் தக்காளி குளிர்பதனக் கிடங்கு அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை பகுதியிலுள்ள மண்ணின் தன்மை, தட்பவெப்ப நிலை ஆகியவற்றின் காரணமாக மிகத் தரமான தக்காளிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்தப் பகுதியில் தக்காளி ஏராளமாக விளைகிற அதே வேளையில், உரிய மார்க்கெட் இல்லாத காரணத்தால், அந்த விவசாயிகள் தக்காளியை சாலையில் கொட்டுகின்ற அவல நிலை நீடிக்கிறது. எனவே, வெளி மாநிலங்களுக்குக்கூட ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் அந்தப்

பகுதியில் தக்காளிக்கென ஒரு குளிர்ப்பதனக் கிடங்கு அமைத்தால், நிச்சயமாக அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அது ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக அமையும். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, இராயக்கோட்டையில் தக்காளிக்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, 3,193 ஹெக்டேர் பரப்பளவிலே தக்காளி பயிரிடப்பட்டு வருகிறது. 51 ஆயிரத்து 88 மெட்ரிக் டன் தக்காளி மகசூல் செய்யப்பட்டு வருகிறது. இதிலே 50,403 மெட்ரிக் டன் தக்காளி விற்பனை செய்யப்படுகிறது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினால், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மாம்பழத்திற்கென 50 மெட்ரிக் டன் குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 17,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 குளிர்பதனக் கிடங்குகள் தனியார்மூலம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி* (R.I.D.F.) *திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட உள்ளது. மாம்பழங்கள் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே விளையும் என்பதால், மாம்பழம் விளையும் காலம் தவிர்த்து மற்ற காலங்களில், இந்தக் குளிர்பதனக் கிடங்குகளை தக்காளி விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*